Chapter X*XIII Code of Criminal Procedure)*

| | | | |
|---|---|---|---|
| *IN THE COURT OF`* | I ADDITIONAL DISTRICT COURT TIRUNELVELI | | |
| Calendar | | SC.No.469/2022 | |
| Miscellaneous | | | |
| Preliminary Register | | | |
| Sessions | | | |
| Deposition of Witness for | | Prosecution | P.W.9 |
| | | Defence | |
| Name | | சுடலைக்கண்ணு | |
| Husband's Name | : | கொம்பையா | |
| Village | : | நாங்குனேரி | |
| Taluk | : | நாங்குனேரி | |
| Calling | : | அரசு தரப்பு சாட்சி | |
| Age | : | 40 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 30th day of June 2026.

(2 எதிரி ஆஜர்.1 வது எதிரி சிறையில் உள்ளார். அவரது தரப்பில் அவரது வழக்கறிஞர் நீதிமன்றத்தில் முன்னிலையாகியுள்ளார்.)

<u>முதல் விசாரணை</u> :–

நான் நாங்குனேரியில் குடியிருந்து வருகிறேன். சாட்சி மஞ்சங்குளம் தெற்கு தெரு சுடலைக்கண்ணு மகன் சுடலைக்கண்ணு என்பவரை எனக்கு தெரியும். எதிரி சுடலைக்கண்ணு என்பவரை எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சிகளில் காணப்படும் கையெழுத்து என்னுடையது அல்ல. இந்த வழக்கு

சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. என் முன்பு யாரையும் கைது செய்து விசாரித்து வாக்குமூலம் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரினார். ஆவணங்களை பரிசீலனை செய்த பிறகு அனுமதி வழங்கப்பட்டது)

<u>குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)</u>

கடந்த 25.07.2018 ஆம் தேதி மாலை 17.00 மணிக்கு எதிரி சுடலைக்கண்ணுவை நீதிமன்ற உத்தரவுப்படி போலிஸ் காவலில் எடுத்து என் முன்பும் சுடலைக்கண்ணு மகன் சுடலைக்கண்ணு முன்பும் எதிரி சுடலைக்கண்ணுவை நாங்குனேரி காவல் ஆய்வாளர் விசாரிக்க எதிரி தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதில் நானும் சுடலைக்கண்ணுவும் கையொப்பம் செய்தோம் என்றும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி என்னை அழைத்துச் சென்றால் வழக்கு சம்பவத்திற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனம் மற்றும் சம்பவத்தின் போது தான் அணிந்திருந்த சாரம் , சட்டை மற்றும் சம்பவத்திற்கு பயன்படுத்திய அரிவாளை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார் என்றும், பின்னர் எதிரி அவரது வீட்டில் இருந்து சம்பவத்தின்போது அணிந்திருந்த அரைக்கை சட்டை , சாரம் , அரிவாள் ஆகியவற்றை எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் எங்கள் முன்பு அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும் அந்த அத்தாட்சியில்

நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்றும் பின்னர் மாலை 06.45 மணிக்கு எதிரி வீட்டின் மறைவான இடத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்த TN 72 AX 8962 பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தினை ஆய்வாளர் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார் என்றும் அந்த அத்தாட்சியில் நாங்கள் இருவரும் கையொப்பம் செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை.

மறுவிசாரணை இல்லை.